**பட்டன்கல பல்கலைக்கழக கல்லூரி - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பட்டன்கல பல்கலைக்கழக கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து பட்டன்கல பல்கலைக்கழக கல்லூரியின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்லூரி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கல்லூரி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கல்லூரியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பான நியமம் 7 இன் 69 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்று பயன்படுத்துவதற்கு தயாராக உள்ள போது அதன் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் அவ்வாறு பெறுமானத்தேய்விடப்பட்டிருக்காததால் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 516,568 ஆல் கணக்குகளில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் கிணறு தோண்டும் வேலை வெற்றியளித்திருக்காததால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 364,255 தொகை செலவினமொன்றாக கணக்குகளிற்கு கொண்டுவரப்படுவதற்குப் பதிலாக நிதிக்கூற்றுக்களில் நடைபெறும் வேலையாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | மூலதன செயற்திட்டங்கள் மீது ஏற்பட்ட செலவினங்களானது உரிய செயற்திட்டம் வெற்றியளித்திருக்காத விடயத்தில் செலவினமொன்றாக இனங்காணப்பட வேண்டும். |
| (ஆ) 2015 சனவரி தொடக்கம் 2017 மே வரையான காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்புக்களை பல்கலைக்கழக கல்லூரி செலுத்தத் தவறியதன் காரணமாக திறன்கள் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தால் முறையே ரூபா 758,119 மற்றும் ரூபா 128,682 தொகையான தண்டப்பணம் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருந்தன. அத்தண்டப்பணத் தொகைகள் ஆண்டின் ஊழியர் சேமலாப நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்ததால் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் தொடர்பான செலவினங்கள் அதே தொகைகளால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தண்டப்பணம் செலவினமொன்றாக தனித்தனியாக இனங்காணப்பட வேண்டும். திறன்கள் துறை அபிவிருத்திச் செயற்திட்டத்தின் நிதிகள் அதன் நோக்கங்களிற்கு வெளியேயான நடவடிக்கைகளிற்கு செலவிடப்பட முடியாது. |
| (இ) திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்தால் 2015 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக கல்லூரிக்கு வழங்கப்பட்ட 56 நிலையான சொத்து உருப்படிகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முதல் 07 உருப்படிகளிற்கான தகவல்கள் பெறப்பட்டிருந்த அதேநேரம் மிகுதி 03 உருப்படிகளிற்கான தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் அனைத்தினதும் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

### 1.5.3 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| என்விகியூ மட்டம் 5 மற்றும் 6 இல் டிப்ளோமா கற்கைநெறிகளை நடாத்தும் நோக்கில் ஸ்தாபிக்கப்பட்ட இப்பல்கலைக்கழகக் கல்லூரியின் விரிவுரையாளர்களிற்கு படிகள் செலுத்தப்பட்டிருந்த போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகார எல்லையின் கீழுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் என்விகியூ 7 இற்கு சமனான கற்கைநெறிகளிற்காக மாத்திரம் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு முறையான அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ரூபா 4,850,250 கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக கல்லூரியின் ஆரம்பத்தில் என்விகியூ 06 கற்கைநெறிகள் தொடர்பான விசேட சுற்றறிக்கைகள் எதுவும் காணப்படாததால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 954 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் டிஎம்எஸ்/1670 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பவற்றின் ஏற்பாடுகளிற்கு இணங்க கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தன. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் காணப்படாத போது உரிய அங்கீகாரத்துடன் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 123,826,115 பெறுமதியான நிலையான சொத்துக்களிற்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) 1994 யூன் 14 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தின் 95 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களிற்கு படிகள் மற்றும் ஏனைய நிதி உதவிகளின் கொடுப்பனவிற்காக அமைச்சரவை, பொது நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் ரூபா 520,455 தொகை பல்கலைக்கழக கல்லூரியின் ஆளுகை சபையின் அங்கீகாரம் மீது மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினா ஏற்றுக்கொள்ளப் படவில்லை. வினாப் பத்திரங்களை பரீட்சித்து தயாரிப்பது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக கல்லூரியால் பெறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1,113,319 பற்றாக்குறையாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,130,240 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 3,016,921 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மொத்த செயற்பாட்டு கிரயம் ரூபா 21,829,439 ஆல் அதிகரித்திருந்த போதிலும் மீண்டெழும் மானியம் மற்றும் பிற்போடப்பட்ட வருமானத்தின் காலக்கழிவு என்பன ரூபா 24,494,831 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளில் ஏற்பட்ட இம்முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழகக் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டிருந்த தேசிய இளைஞர் மன்றத்திற்குச் சொந்தமான 05 ஏக்கர் காணியை பல்கலைக்கழக கல்லூரிக்கு கையளிப்பதற்கு கணக்காய்வு திகதியான 2019 மார்ச் 24 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியை கையேற்றல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக உரிய தரப்பினர்களுடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | காணியை கையேற்கும் செயன்முறையை துரிதப்படுத்துதல் அவசியமானதாகும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கற்கைநெறிகளின் குறித்த சில பாடத்தொகுதிகளிற்காக (modules) திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை விரிவுரையாளர்களால் பூர்த்தி செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. இதனால் கற்கைநெறிகளின் தரத்தை போல் மாணவர்களால் பெறப்பட்ட அறிவாற்றலின் போதுமான தன்மை கணக்காய்வின் போது திருப்திகரமாக இருக்கவில்லை. | ஒவ்வொரு பாடநெறிகளிற்காகவும் பூர்த்தி செய்யப்பட வேண்டிய விரிவுரை மணித்தியாலங்கள் பாடவிதானங்களில் காட்டப்பட்டுள்ள போதிலும் குறித்த சில பாடநெறிகளிற்காக பாடவிதானங்களில் குறிப்பிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை வழமையற்றிருந்தது. பாடவிதானங்களில் குறிப்பிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் எண்ணிக்கை குறித்த சில | திட்டங்களை தயாரிக்கும் போது தேவையான விரிவுரை மணித்தியால எண்ணிக்கை தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சந்தர்ப்பங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த அதேநேரம் சில சந்தர்ப்பங்களில் விரிவுரை மணித்தியாலங்களை விஞ்சி விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன. | |
| (ஆ) | நிர்மாண தொழில்நுட்பம் மற்றும் கணிய அளவீட்டியல் (Quantity Surveying) கற்கைநெறிகளிற்காக பரிந்துரைக்கப்பட்ட "Wood craftsman Practices" பாடநெறியை கற்பிப்பதற்கு பல்கலைக்கழக கல்லூரியில் விரிவுரையாளரொருவர் காணப்படாததன் காரணமாக அப்பாடநெறி 2016 ஆம் ஆண்டிலிருந்து கற்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2016, 2017 மற்றும் 2018 மாணவர் குழுக்களிற்கான "Wood craftsman Practices" பாடநெறிக்காக விரிவுரையாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதிலுள்ள சிக்கல்கள் காரணமாக அப்பாடநெறி கற்பிக்கப்பட முடியாதிருந்தமை ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | கற்கைநெறிகளில் பரிந்துரைக்கப்பட்ட பாடநெறிகளை கற்பிப்பது அவசியமாக உள்ளதால் விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக கல்லூரியால் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர் குழுக்களின் ஆரம்ப பரீட்சை தொடர்பாக மீளாய்வாண்டின் போது வெளியிடப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம் 02 கற்கைநெறிகளுக்குரிய 02 பாடநெறிகளில் மாணவரொருவரும் சித்தியெய்தியிருக்காத அதேநேரம் 06 கற்கைநெறிகளுக்குரிய 17 பாடநெறிகள் தொடர்பாக மாணவர் சித்தியெய்திய விகிதம் 06 சதவீதத்திற்கும் 61 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது. | ஆரம்ப கற்கைநெறி தொடர்பாக மாணவர்களின் குறைவான சித்தியெய்திய விகிதத்திற்கு பங்களித்திருந்த பிரதான காரணம் ஆங்கிலத்தில் அவர்களது அறிவாற்றல் குறைவாக இருந்தமையாகும். இச்சிக்கலை தீர்வு செய்வதற்கான ஆரம்ப படிமுறையாக மாலைநேர வகுப்புக்கள் ஆங்கில போதனாசிரியையால் நடாத்தப்படுகின்றது. | மாணவர்களின் சித்தியெய்தும் விகிதத்தை அதிகரிக்கும் நோக்கில் அளவீடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டு அல்லது திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டம் - 2015 மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 722,261 பெறுமதியான | செயன்முறை பயிற்சிகளின் போது பூர்த்தி செய்யப்பட்ட உணவகம் மற்றும் குளியலறையை தயாரிப்பதற்கான செயற்திட்ட முன்மொழிவுகள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சொத்துக்கள் உயர் வினைத்திறன் மற்றும் செயற்திறனுடன் உரிய நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உபகரணம் பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தது. | முகாமைத்துவ தகவல் முறைமைகளில் பௌதீக ரீதியானவை அல்லாத சில காணப்பட்டன. திறன்கள் துறை அபிவிருத்தி பிரிவு மற்றும் தொழில்நுட்ப தொழில் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் என்பன இணைந்து ஒன்லைன் (online) இல் உருவாக்கப்பட்ட தகவல் முறைமை ஒன்றாகும். இன்ரநெற் ஊடாக எம்ஐஎஸ் எந்தவொரு கருவியிலும் (Device) அணுகப்பட முடியும். அதற்காக குறித்த கணனியொன்றோ அல்லது இடமொன்றோ ஒதுக்கப்பட வேண்டிய தேவையில்லை. | |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 பெப்பரவரி 21 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் டிஎம்எஸ்/1670 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் மூன்று தகுதிகாண் விரிவுரையாளர்கள் ஆகக்குறைந்த தகைமைகளை கொண்டிருக்காத போதிலும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அவர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். | 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக கல்லூரிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட இரண்டு தகுதிகாண் விரிவுரையாளர்கள் சேவையில் நிரந்தரமாகும் நோக்கில் பட்டப்பின்படிப்பு கற்கைநெறிகளை தொடர்வதற்கு வழிகாட்டப்பட்டிருந்தனர். மற்றைய விரிவுரையாளர் இந்த ஆண்டில் அதேபோல் தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றார். | ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கிணங்க ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 05 போதனாசிரியர் பதவிகள் காணப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 மே 15 வரையிலும் அப்பதவிகளிற்கான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிர்ப்புதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கேட்போர் கூடத்தில் 04 நானாவித செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ரூபா 2.8 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கேட்போர்கூடம் மாற்றியமைக்கப் பட்டிருக்காததால் அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட முடியாதிருந்தன. | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்பட வேண்டியதுடன் 03 மாதங்களிற்கு ஒரு தடவை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். எனினும், பல்கலைக்கழக கல்லூரி அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் சுட்டிக்காட்டப்பட்டவாறு கணக்காய்வுக் குழுவை நியமனம் செய்வதற்காக உள்ளக உத்தியோகத்தரொருவரை நியமனம் செய்யும் நோக்கில் 2017 ஆம் ஆண்டில் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையுடன் இணங்குதல் வேண்டும். |